1344

ஸ்ரீராமஜெயம்.

DEC 1924

அடுத்தவர்கள் தலைகளெல்லாம் வெடுக்கனவே
வாங்கி வெகு குடித்தனங்கள் கெடுத்துவிட்ட

கொடுக்கூர் ஆறுமுகம் கொலைச்சிந்து.

இரண்டாம் பாகம்.

இஃது ஜெயங்கொண்டசோழபுரம்
S. S. பகவந்தரூவ் அவர்களால்,
இயற்றப்பட்டு.

T. K. காசினாத்ரூவ் கோவில்கர் & பிரதர்ஸ் அவர்களது,
கும்பகோணம்
ஸ்டார் பிரஸ் ஹெட் ஆபீஸில்,
பதிப்பிக்கப்பட்டது.
1924.
காப்பீரைட் ரிஜிஸ்டர்.

[அணா 1.

ஸ்டார் பிரஸ், தமிழ் வருஷத்திய காலண்டரை எதிர்பாருங்கள்

O-, IMPR, K
A12G
18160

உ

ஸ்ரீராமஜெயம்

கொடுக்கூர் ஆறுமுகம் கொலைச்சிந்து.

894.811
2547

விநாயகர் காப்பு வெண்பா.

வருமமுடை ஆருமுக னருட்செயல்கள் குறைவா இம்
மறுமுறையும் சரிவாவே உரையிட இத்— தாய்மொழியில்
வாய்குழறி யேஎழுதும் சேயுன்மொழியே எழ வி
நாயகா முன்னடைகுவாய்.

நொண்டிச்சிந்து.

1 காடுமேடு தாண்டிவந்து—சொந்த
வீடுவாசல் போனவகை தா னரிந்து
2 தாயோ டேடன்பிரந்த—மாமன்
தருமதுரைபெருமாள் படையாச்சியாம்
3 வறுமொரு பொருளெல்லாம்—வலம்
வறுமமுடனெடுத்த வகையரிந்து
4 வடக்கே வெகுதூரம்—உள்ள
இடையக்குரிச்சிபோகும் தடமதிலே
5 வந்து பதுவிருந்து—அவனை
பொட்டெனவே சுடடு அவன் தலைஅரிந்தான
6 அருகினில் கொவ்வாகம்—அங்கு
எங்குமிலா செங்குந்தர்கள் சங்கமநேகம்
7 கொவ்வாகம் தெருவதிலே—வந்தார்
பவ் வியமாக இரு போலீஸ்காரர்
8 அதுதெரிந் தாருமுகம்—வெகு
வேகமுடன் விரைவாய் அருகில்வந்து
9 இரையானீர் நீங்களின்று—எந்தன்
கரையுறு கத்திதனுக் கித்தினமோடு
10 வந்திடுவீர் என்பிரசே— என்று
கொண்டுபோனன் அய்யூர்காட்டில் ரெண்டுபேரையும்
11 மெத்த அவன் மனமிரங்கி—அவரை
புத்திசொல்லி போகவிட்டான் போக்கிரியவன்
12 அதுமுதல் வந்துதைய்யா—அவனுக்கு
ஆகாதகாலம்வந்து நேர்ந்துதைய்யா
13 இதமுடன் துரைத்தனத்தார்—பலபல
விதத்திலும் அவனையே தேடலுற்றார்

14 கருவித்தார் பாருமையா—வெகுஜன
ரிஜர்வுபட்டாளங்கள் விரைவுடனே

15 தஞ்சாவூர் மஞ்சகுப்பம்—அன்றி
ரஞ்சித மானதொரு திருச்சியிலும்

16 எ தேஷ்டமாய் வந்து சேர்ந்தார்—வெகுபேர்
தாஷ்டீகத்துடன் தனி கோஷ்டி கோஷ்டியாய்

17 பந்தி பந்தியாய்ப் பிரிந்து—இரவில்
எந்ததிக்கும் தேடிவந்தார் சந்துபொந்தின்றி

18 கொஞ்சநஞ்ச அலைச்சலல்ல—அவர்கள்
துஞ்சவேளை யிஞ்சமில்லை கொஞ்சநேரமும்

19 எல்லாவித ஊர்களிலும்—தேடி
சல்லடைகள் போட்டவினை சலித்துவிட்டார்

20 மேலராயம் புரம்தன்னிலே—தாலுக்கா
வேலையாக போனன் ஒரு வில்லைச்சேவகன்

21 வாதனைகள் செய்து அவனை—வெகுவாய்
வேதனைகள் செய்துவிட்டான் விதவிதமாய்

22 இஸ்த்திரீ குலத்தாராய்—எங்கும்
விஸ்தாரமாய் வாழ்ந்ததொரு வேந்தர் குலமாம்

23 ராமச்சந்த்ர படையாச்சி—அவருடன்
ஸ்நேகமாய நேககாலம் வாழ்ந்து வந்தான்

24 மாணிக்கம் என்றொருவன்—நடுவில்
தோணிஇருவரையும் கலைத்துவிட்டான்

25 அதுமுதல் இருவருக்கும்—பாஸ்பரம்
ஒற்றுமை இல்லாததொரு கொற்றவரானர்

26 போட்டிகள் போட்டுக்கொண்டு—அவனை
காட்டிக்கொடுப்பதென்று காட்டங்கொண்டான்

27 அதுதெரிந் தாறுமுகம்—மீறி
சதிசெய்ய துணிவுடன் மனதில் கொண்டு

28 ராத்திரி ஜாமத்திலே—வெகுபேர்
போக்கிரிகளுடனே சீக்கிரம் வந்து

29 உதிரமொ ழுகவழுக—அவன்தன்
சிரமதைத் துணித்துடன் எடுத்துச் சென்றான்

30 எனதுளம் கடுங்குதையோ—இதனை
எடுத்துசொல்ல அதை விரித்துச்சொல்ல

31 ஆனூர்கோ பாலன்—அவனுக்கு
தோணும் தவிலாம் தானுமேசெய்தான்

32 சேதி அரிந் தோ ரிரவு—ரிஜர்வு
காரர்களெல்லாமங்கு தலைமறைவாய்

33 கார்த்திருந்தார் பிடித்துக்கொள்ள — அவனிதை
பார்த்திருந்து பருந்துபோல் பரந்துவிட்டான்

34 நாடுமிடமெல்லா மரிந்து—பின்னால்
தேடி தன்னை நாடிவரும் சேதிதெரிந்து

35 எது இனி இடமுமில்லை—அங்க
மேதினியில் வேறு ஒரு தடமுமில்லை

36 சீக்கிரம் பிடித்திடுவார்—என்னை
ஆக்கிரமித் துயிரை மடித்திடுவார்

37 தீங்குசெய் தீயர்களின் — தலையை
வாங்கும்வரையில்இனி தூங்குவேனோ

38 வீரா ரெட்டித் தெருவில்—தன்னை
நேராக காட்டிவிட்ட நேர்மையுள்ள

39 நாரா யணரெட்டியார—தன்னுடைய
பாரித் திருந்த தொருவீட்டைக் கொளுத்தி

40 கொடுக்கூரில் வந்துகுதித்து—அங்கு
கூடி இருந்தஅநேகம்பேரை வதைத்து

41 மெத்தவும்வி ரோதமுள்ள—எதிரி
வித்தக முத்துக்கு மாரபிள்ளை

42 தலைமுறை தலைமுறையாய்—மிகவே
வசித்தகல்வீ டதை பொசுக்கிவிட்டு

முதுகுளம் வந்துவிட்டான்—தனக்கதி
இதமுள்ள ராமசாமி ரெட்டியாரிடம்

44 வந்தவனை விசுவாசமாய்—விசாரித்து
பந்திபோஜனங்கள்பரி வுடனே செய்தார்

45 சோலியின்றி அவரிடமே—எந்த
வேளையிலும் வந்துபோகும் வகையறிந்து

46 வான்புகழ்சீ னுவாச—அய்யரும்
தாமே அவரை வெகு நேமமுடனே

47 கூப்பிட்டு தனிமையிலே—வெகு
கோபமுடனேமனஸ் தாபமுங்கொண்டு

48 எட்டுநாளை கெடுவுக் குள்ளே—காட்டி
விட்டாலும்சரி நீரே சுட்டாலும்சரி

49 இக்—கட்டளையைமீறி கடந்தால்—நீர் வெகு
இக்கட்டிலே மாட்டிக்கொண்டு துன்பப்படுவீர்

50 சத்தியமாய் வைத்திடுவோம்—சிறையில்
உத்திரவிது னக்சென்று உறைத்துவிட்டார்
51 அதுமுதல் பீதிகொண்டு—இனிமேல்
ஏதுசெய் வோமென ஏக்கங்கொண்டு
52 இனி—வந்தால் ஆறுமுகம்—அவன்
சந்தோஷ மாயிருக்கும் சமயத்திலே
53 தொலைத்திட வேணுமென்று—மனதில்
நிலைத்திடவே வெகு எண்ணமுங் கொண்டு
54 மயங்கித்தி யங்கியிருந்தார்—அந்த
சமயந்தா ளுறு—முகமும் வந்தான்
55 போஜன மானவுடன்—வெகு
யோசனை செய்குளுர் ரெட்டியாரும்
56 துஷ்டருடன் கூடுவது—நமக்கே
கஷ்டம்வந்து நேருமென்று மிகத்தெளிந்து
57 துட்டன்செய்த கஷ்டம தெல்லாம்—நினைந்து
சுட்டுவிடவே அவர் கிட்டியே வந்தார்
58 தொண்டருக்கும் உண்டகளைப்பு—உண்டு
என்றுசொல்லும் வாறுபோலே உடம்பலுத்து
59 தூங்குருன் குறட் டைவிட்டு—பலமிருந்
தோங்கிய தோளினுல் தூணைக்கட்டி
60 இதுதான் சமயமென்று—ரிவால்வார்
சரியாக வைத்துக்கொண்டு அருகில் சென்று
61 மாருக்கு குறிபார்த்து—ரிவாலை
இழுத்து விட்டாரதை அழுத்திவிட்டார்
62 ஆயிறத்தி தொளாயிரமாம்—அதனுடன்
இருபத்தி ஞலுங்கூடி ஒன்பதா மாதம்
63 இருபத்தி மூன்ருந்தேதி—அன்று
ஒருவர்க்கும் சொல்லாமலே உயிர் துறந்தான்
64 இருபத்தி ஆருந்தேதி—ஜெயங்கொண்டம்
எடுத்து வந்தா ரவனை உடப்புடனே
65 வேணஜனம் நம்பவில்லை—இதையே
காணவந்த மாக்தருக்கு கணக்கு மில்லை
66 அள்ளுபொடி தெள்ளுபொடியே—அப்போ
அல்லோகல்ல மாய்விட்டது உள்ளபடியே
67 முண்டனுக்கி ரண்டு ஆளென்று—எங்கும்
பெண்கெளும் சொல்லுவார்கள் கண்டபடியே

68 அந்த—ரெண்டு ஆளும் இவனுக்கில்லை—ஒரே—ஒரு
குண்டினாலே போய்ச்சேர்ந்தான் சண்டனாரெல்லை
69 ஊரார்கள் பழிகளெல்லாம்—அவனுக்கு
ஆறாய்ப் பெரிகிற்தய்யா அவதிப்பட
70 எத்தனையோஉத் தமிகள்—நித்தம்
பத்தியிடும் சாபமெலாம் பற்றிக்கொண்டதே
71 ஊர்பல திரிந்துகொண்டு—உலகில்
பேர்பலசொல்லிப் பிதற்றிக்கொள் ளும்
72. சேவல மாந்தர்களே—எந்தன்
காவினா லுங்களுக்கு நவில்வே னென்று
73 தர்மமே தலைகாக்கும்—முடிவில்
கர்மமெ லாங்கூடி உயிர்போக்கும்
74 ஆறுமுகம் போனவழி—இதமுற
அறிந்து கொள்வீர் நன்றாய்த் தெரிந்து கொள்வீர்.

தந்தினம் தனதனன.

கும்மி.

---

1 கும்மியடி பெண்காள் கும்மியடி இரு
செங்கை சிவந்திட கும்மியடி
நம்மையாளுமைந்தாம் ஜார்ஜம்கிழவே
செம்மையாய் கும்மி யடியுங்கடி
2 செப்பிவந்ததொரு மெய்க்கதை தன்னிலே
தப்பியதெல்லா மெடுத்துச் சொல்ல
முப்பழம்தேன்கனி அப்பம்அவலுண் ணும்
கற்பகப் பிள்ளையார் காப்பாமே
3 சிறுமைப்பட் டிந்தநற் கதையின்வ ரலாறு
சேர்த்து வைத்தா ரொரு போலீஸ்நண்பர்
பருவத்தி லிவருக்கு இதமாகக் கொடுத்தனர்
இருநூத்தி தொண்ணூத்தி எட்டாகம்பர்
4 ராஜவிசுவால ராஜகோபாலராம்
கெடுமதியில்லாத வடுகர்குலம்
ஆஜானுபாகுவாம் தேஜனையே தினம்
போஜனம்செய்தபின் புகழுங்கடி

5 எத்தனையோ பேர்கள் ஆறுமுகத்திடம்
நத்திஇருந்தனர் பக்தியுடன்
அத்தனைபேரையும் பத்தி பத்தியாக
உத்தமியே சொல்வேன் கேளடிநீ

6 வல்லாள கண்டனும் நல்லுசாமி என்ற
பொல்லாதவனொரு கொவ்வாகமாம்
எல்லாவுதவியும் சொல்லாமலேசெய்ய
வல்லவனமடி வான்மயிலே

7 நிலந்தனி லவனுக்கு குழந்தைவேலைவிட
நிலைந்துஇருந்தவர் வேறுஇல்லை
கலைந்துவி டாமலே மகிழ்ந்துட னெப்போதும்
அலைந்துதி ரிவானும் கேளுங்கடி

8 எள்ளுக்கு ளெண்ணைபோ விருந்து உழைத்தவன்
நொள்ளைவீரமுத்தான் குளத்தூரிலே
பள்ளனே ஆனாலும் கொள்ளை அடிப்பதில்
எல்லையில்லா புகழ் கொண்டவனடி

9 உக்கிரமாயிந்த திக்குகள் எட்டிலும்
சக்கரம் சுற்றிச்ச வாரிவரும்
மிக்கப லமுள்ள கொக்கு வேலாயுதம்
பக்கத்து ணையாண்டி பாங்கிமாரே

10 எங்குசென் றாலுமே மங்கள மாய்வரும்
இங்கித மாய்தத்த னூரிலுள்ள
மங்களாவெட்டிசெங் காபடையாச்சியாம்
மங்கையரே அவன் தோழனடி

11 மாளாத அன்புடன் காலாலி டுப்வேலை
வேளர்வே ளையிலும் தோதரிந்து
காலைமாலைஎந்த வேளையிலும் செய்யும்
மேலூர்ந டேசனும் கேளுங்கடி

12 தோணுமு தவிகள் வேணபேர் செய்ததில்
ஆனூர்கோ பாலனொ ருவனடி
வேணமட்டுமிவன் பேணியஉதவிகள்
கோணிப்பை ஏத்தலாம் கோதையரே

13 அய்யூர்தி ருக்கோணம் குவ்வாகம் தன்னோடு
வெய்யிலூர் பொய்யானூர் முனிசிப்பெலாம்
மெய்யாயி வனுக்கு டங்கதயா மிதிலொரு
பொய்யு மில்லையடி பூங்குயிலே

14 மேல்சூழ் பூமியில் சிலமுடன் சிறு
பாலன்பக வந்தன் சேர்த்த கதை
காலஅள வின்றி வால்முளைத் தென்றுமே
சாலப்பெ ருகிட கும்மிஅடி

15 எந்தன்ம னதிலே வந்தமொ ழிஎலாம்
சேர்த்திதை சிந்ததாய் பூர்த்திசெய்தேன்
இந்தால் சிந்ததில் வந்துதா னுல்பிழை
சொந்தம்போ லெண்ணிப்பொ ருத்திடுவீர்

16 மக்கள்பிழை செய்தாலுக் கிரம்கொள் வாரோ
மிக்குடை தாதைமார் மேதினியில்
அக்கதை போலவே நோக்கிய ருளுவீர்
தக்க குணமுடை தார்வேந்தரே

17 ஆறுமுகம் கதை அம்புவி யில்வாழி
சீருய்ப டித்தவர் தானும் வாழி
காருண்ய மன்னனும் கர்ணனுக் குநிகர்
சாருஞ்ஜார் ஜுமன்னன்தானும் வாழி

2வதுபாகம் முற்றிற்று

முக்கிய அறிவிப்பு :— முதல் பாகம், இரண்டாம் பாகம் இப்புத்தகங்களில் உள்ள விஷயங்களை எமது உத்திரவு அன்னி யில் ஒருவரும் பிரசுரிக்ககூடாதென்பதை கண்டிப்பாய் தெரி விக்கிறோம்

T. K. K. கோவில்கர் & பிரதர்ஸ் அவர்களது
"ஸ்டார் அச்சுக்கூடம்"
கும்பகோணம், தஞ்சாவூர்.
எங்களது அச்சுக்கூடத்தில் அரிய பெரிய மிஷின்களைக்கொண்டு நவீன புதுமாதிரி எழுத்துக்கொண்டும் குறைந்த சார்ஜுக்கு குறித்த டயத்தில் சுத்தமாக செய்து கொடுக்கப்படும்.